ஐயப்ப பக்தர்கள் அந்த குமுளி border-க்கு வருகிறார்கள். கேரளாவிற்கும், தமிழ்நாட்டிற்கும் எல்லையாக இருக்கின்ற குமுளியில், பேருந்துகள் நடுரோட்டில் நிற்கின்றன; மக்கள் நிற்பதற்கு வசதியில்லை. அந்தப் பணிமனையை பேருந்து நிலையமாக மாற்றினால், சுற்றுலாப் பயணிகள் மட்டுமின்றி, ஐயப்ப பக்தர்களும் பயன்பெறுவார்கள். இங்கிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் ஐயப்பன் கோயிலுக்குச் சென்று வருகிறார்கள் என்பதை மனதிலே வைத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பணிமனையைக் கட்டித் தருவதற்கு ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிமனையைப் பேருந்து நிலையமாக மாற்ற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரினார்கள். பேருந்து நிலையம் அமைப்பது, உள்ளாட்சித் துறையினுடைய கட்டுப்பாட்டில் வரக்கூடிய பிரச்சினை. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ, ஆண்டி அம்பலம் அவர்கள். (குறுக்கீடு) இருங்கள், வாய்ப்புத் தருகிறேன்.*

***திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 12-8-2016 அன்று வெள்ளிக்கிழமை*

நத்தம் தொகுதிக்குட்பட்ட சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கம்பிளியான்பட்டி ஊராட்சி, அம்மாபட்டியை சேர்ந்தவர்கள், திருச்சி மாவட்டம், வளநாடு கைகாட்டி கோயிலுக்குச் சாமி கும்பிடச் சென்றனர். கோயிலுக்குச் சென்றவர்களின் வாகனத்தின்மீது பேருந்து மோதி, 10 பேர் இறந்துவிட்டனர். நான் மருத்துவமனைக்குச் சென்று பார்த்தேன். மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களும் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று ஆறுதல் கூறினார்கள். எங்கள் மாவட்டத்தைச் சார்ந்த, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும் அம்மாபட்டிக்கு நேரில் சென்று இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்கள். இறந்த 10 பேரும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மிகவும் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்ந்து வந்த காரணத்தினால், இறந்த ஒவ்வொரு நபரின் குடும்பத்தினருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.5 இலட்சம் நிவாரணம் வழங்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று காலையில்தான் என்னிடம் கொடுத்திருக்கிறீர்கள். அரசிடமிருந்து பதில் வந்தவுடன் தெரிவிக்கப்படும். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்திலிருந்து வங்கியினுடைய பணம் எடுத்து வரும்பொழுது கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. அதுசம்பந்தமாக ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள்; அது என்னுடைய ஆய்வில் உள்ளது. உட்காருங்கள்.

4. கவன ஈர்ப்பு

வேலூர் மாவட்டம், சோளிங்கர் மற்றும் பேலூரில் துணை மின் நிலையங்கள் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. என்.ஜி. பார்த்திபன் மற்றும் திரு. அ. நல்லதம்பி ஆகியோர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்